Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkural@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S Polyclinic

பாரா ஆசிய விளையாட்டுப் போட்டி; பதக்கங்களை குவித்த தமிழக வீராங்கனை துளசிமதிக்கு ரூ.1.25 கோடி பரிசு: முதலமைச்சர் விஜய் அறிவிப்பு

சென்னை 24, அக்டோபர் 2026: பாரா ஆசிய விளை ய £ ட் டு ப் போட்டிகளில் தங்கம், 2 வெள்ளி வென்ற து ள சி ம தி க் கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித் துள்ளார். மேலும் துளசிமதி முருகேசனின் சாதனைகளைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.25 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து முதலமைச்சர் வெளி யிட்டுள்ள அறிக்கை யி ல்; "ஜப்பானில் நடைபெற்றுவரும் 5-வ து பாரா ஆசிய விளை யாட்டுப் போட்டி களில், பேட்மிண்டன் விளையாட்டில், பெண்கள் இரட்டையர் ஷிலி3-ஷிஹி5 பிரிவில் தங்கப் பதக்கமும், கலப்பு இரட்டையர் ஷிலி3-ஷிஹி5 பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்ற இந்திய அணி களுக்கும், அவ்வணி களில் இடம்பெற் றிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனை துளசிமதி முருகேச னுக்கு எனது மன மார்ந்த பாராட்டுகள் மற்றும் வாழ்த்துகள்!

மிராங்கனை துளசிமதி முருகேசனின் சாதனைகளைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.25 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும். பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவர், இதுவரை மூன்று பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த் துள்ளார்.

அவரது தொடர் வெற்றி, சாதிக்கத் துடிக்கும் இளம் தலை முறையினருக்கு புதிய நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக் கிறது. அவரைப் போன்ற திறமைமிக்க அனைத்து விளை யாட்டு வீரர், வீராங் கனைகளுக்குத் தமிழ் நாடு அரசு என்றும் உறுதுணையாக நிற்கும்" என தெரிவித்துள்ளார்.